வாசிக்க: மத்தேயு 10:23-33

"நீ ஜெபிக்கும் போது உன் அறையில் நுழைந்து, உன் கதவைப்பூட்டி, மறைவாயிருக்கிற உன் தந்தையை நோக்கி வேண்டிடு; அப்பொழுது அவர் உனக்கு வெளிப்படையாய்ப் பலனளிப்பார்" (மத் 6:5,6)

மன்றாட்டு ஜெபம் மற்றும் ஆன்மீகப் போராட்டம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியோடு பட்டணங்களிலும், நகரங்களிலும் தெருக்களைச் சுற்றி அணிவகுத்து நடந்து ஜெபித்து வரும் பழக்கமும் தோன்றியுள்ளது. இது ஜெபப் பவனி அல்லது ஜெப ஊர்வலம் (Prayer Walk) எனப்படுகிறது. இது சரியா ?

இயேசுவைப் பொறுத்தவரை, ஜெபமானது பிரதானமாக மறைவிலேயே செய்யப்படவேண்டும் (மத் 6:5,6). அவரது காலத்து மார்க்கவாதிகள் சிலர் "வீதிகளின் சந்திகளில்" வேண்டுமென்றே நின்று ஜெபிக்கும் பழக்கத்தை அவர் வன்மையாய்க் கண்டித்தார். பொதுவிடங்களில் அவர் ஜெபித்ததாய் நாம் வாசிப்பதரிது. நோயாளி களுக்காய்க்கூட அவர் பொதுவிடங்களில் ஜெபித்ததாய்த் தெரியவில்லை; அவர் களைக் குணமாக்கினார், அவ்வளவுதான்.

ஏதென்சு நகர் சிலைகளால் நிறைந்திருந்ததைக் கண்ட பவுல் ஜெப ஊர்வலம் நடத்தாமல் சந்தைவெளிகளில் தினமும் "மக்களோடு பேசினான்" (அப் 17:16,17). பேதுரு சிறையிலடைக்கப்பட்டபோது, விசுவாசிகள் சிறையைச் சுற்றிப் பவனி வராமல் வீடுகளில் ஜெபித்தார்கள் (அப் 12:5,12,17). ஆண்டவர் பேதுருவை விடுவித்தார்.

ஜெப ஊர்வலத்திற்கு ஆதாரமாக மேற்கோள் காட்டப்படும் வேதச் சம்பவம் இஸ்ரவேலர் எரிகோ கோட்டையைச் சுற்றிவந்ததாகும் (யோசு 6). ஆனால் இச்சம்பவம் புதிய ஏற்பாட்டு யுகத்திலுள்ளோருக்கு ஆன்மீகப் போராட்ட ஜெபத்தைப் போதிப் பதற்காய் எழுதப்பட்டதல்ல. இப்போது பொல்லாத சக்திகளின் முக்கிய இருப்பிடம் "வான மண்டலங்களில்" உள்ளது. நாம் கிறிஸ்துவுடன் "உன்னதங்களில்" வீற்றி ருக்கிறோம் (எபே 6:12). இப்படியிருக்க, போராட்டமானது சமதளத்தில் அல்ல. மேலிருந்து நாம் எதிரியைத் தாக்குகிறோம். எருசலேமில் இயேசு வெற்றிப்பவனி வந்ததும் ஜெப ஊர்வலத்திற்கு எடுத்துக்காட்டல்ல. "ஓசன்னா" என்றால் "ஆண்டவா, எங்களை விடுதலை செய்!" என்று பொருள். ரோமரின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவிக்கப்பட யூதரின் இதயக்கதறல் அது.

கால் மிதிக்கும் தேசமெல்லாம் கிடைக்குமென்பது பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட பூகோள சம்பந்தமான தேசீய வாக்குத்தத்தம் (உபா 11:24; ஆதி 13:14,15). இந்த நற்செய்தி யுகத்தில் இடங்களல்ல, இனங்களே நமக்கு வாக்கு. ஜெப ஊர்வலங்கள் நடத்த செலவிடும் நேரத்தையும், பலத்தையும் தீவிர நற்செய்தியறிவிப்பு முயற்சிகளில் செலவிட்டால் கிறிஸ்துவின் கட்டளையை வெகு சீக்கிரம் நிறைவேற்றிவிடலாம். ஜெப ஊர்வலங்கள் தவறல்ல, ஆனால் தேவை யற்றவை. அந்த இடத்தில் ஜெபித்தாலும் அறையிலிருந்து ஜெபித்தாலும் ஒன்றுதான்.

பக்தரே, ஒன்றாகக் கூட்டம் கூடுமேன்;
எங்களோடு சேர்ந்து ஆர்ப்பரியுமேன்!
விண்ணோர் மண்ணோர் கூட்டம் இயேசு ராயர்க்கே
கீர்த்தி, புகழ், மேன்மை என்றும் பாடுமே! (பாமாலை)

— Dr. Sabine Baring-Gould, 1834-1924

(கிராமங்களில் பாலர் பவனிக்காய் இயற்றப்பட்டது)